சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.22.01.2026.
O.S.No. 498/2018
DW 1 : ஜோதி (வயது 65 ) க/பெ.ராமசாமி
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் எனது தாயார் ராமாயி அம்மாள். எனது அம்மா ராமாயி அம்மாளுக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பாவை கல்யாணம் செய்த வகையில் அவருக்கு கொடுத்த சொத்து. அந்த சொத்தை எனது அப்பா நல்லுகவுண்டர் கிரயமாக வாங்கினார். எந்த வருடம் எனது அப்பா கிரயம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த கிரய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் வழக்கில் தான் உள்ளது. அந்த கிரய பத்திரத்தினை யார் கிரயம் செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

ராமாயி அம்மாளுக்கு சொத்து பாத்தியமானது என்பதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.நான் தாக்கல் செய்துள்ள வம்சா வழி பட்டியலில் குறிப்பிட்டுள்ள சிவபாக்கியம் எனது அத்தை. தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே ஒரு வழக்கு நடந்ததா என்றால் ஆமாம். அந்த வழக்கு எண் தெரியாது. அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வயதாகிவிட்டது தெரியவில்லை,

அந்த வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பானதா அல்லது எதிராக தீர்ப்பானதா என்றால் எதிராக தீர்ப்பானது. மேல்முறையீடு வழக்கு நடந்ததா என்றால் தெரியவில்லை. எனக்கும் சுப்பம்மாளுக்கம் பாதி பாதி பாகம் என்று தீர்ப்பு வந்ததா என்றால் இல்லை. மேல்முறையீடு வழக்கில் வழங்கிய தீர்ப்பை நான் படித்து பார்த்தேனா அல்லது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது.

அந்த தீர்ப்பு பற்றிய விவரங்களை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் சொன்னாரா என்றால் வழக்கறிஞர் சொன்னார். எனக்கு வழக்கு சொத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது மற்றும் அதன் விஸ்தீரணம் என்ன என்று தெரியுமா என்றால் அகரம் கிராமத்தில் உள்ளது, பரப்பளவு தெரியாது.

சுப்பம்மாள் எனது சின்ன மாமியாரின் நாத்தனார். எனது அம்மா ராமாயி சுப்பம்மாளுக்கு அத்தை உறவு முறை. வழக்கு சொத்தில் எதன் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் எனது சொந்த வீடு என்பதால் வழக்கு தாக்கல் செய்தேன். 05.12.1961 ல் தாவா சொத்தை பொறுத்து ஒரு கிரய பத்திரம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
ஜோதி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA
Digitally signed by R.MOHANA
Date: 2026.01.22 18:43:40 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி